பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

15 03 2024 **FRIDAY** 6 45 **AM**

வணக்கம். ஆல் இண்டியா ரேடியோ - சென்னை - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கன்னியாகுமரியில் இன்று நடைபெறவுள்ள பிஜேபி பொதுக்கூட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி உரையாற்றவுள்ளார்.

2. பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு 2 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளதாக எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

3. மாநிலத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 15 லட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி கூறியுள்ளார்.

4. சென்னை, தூத்துக்குடி உள்ளிட்ட ஆறு மாவட்டங்களில் மீன்வளத்தை பெருக்க செயற்கை பவளப்பாறைகள் அமைக்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. ஆல் இங்கிலாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**>>>><<<<**

கன்னியாகுமரியில் இன்று காலை நடைபெறவுள்ள பிஜேபி பொதுக்கூட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி உரையாற்றவுள்ளார்.

பிரதமரின் வருகையை ஒட்டி, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - குமார் 38 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, வரும் 18ஆம் தேதி சேலத்தில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்திலும், 19ஆம் தேதி கோவையில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் திரு. நரேந்திர மோடி உரையாற்றவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>><<<<**

பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு 2 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளதாக எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

இது, இன்று காலை 6 மணி முதல் அமலுக்கு வந்தது.

இதையடுத்து சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை 100 ரூபாய் 75 பைசாவாகவும், டீசல் விலை 92 ரூபாய் 34 பைசாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, பெட்ரோலிய அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த விலை குறைப்பு மூலம் டீசலில் இயக்கப்படும் 58 லட்சம் கனரக சரக்கு வாகனங்கள் மற்றும் பெட்ரோலில் இயக்கப்படும் 6 கோடி கார்கள், 27 கோடி இருசக்கர வாகனங்கள் ஆகியவற்றுக்கான எரிபொருள் செலவு குறையும் என்று குறிப்பிட்டுள்ளது.

>>>><<<<

தமிழகத்தின் வளர்ச்சிக்காக திமுக அரசு பாடுபட்டு வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்த பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில், இந்தப் பணிகள் செயல்படுத்தப்படுவதாக அவர் கூறினார்.

அடுத்த மூன்றாண்டுகளில் 200 திட்டங்கள் இதன்கீழ் நிறைவேற்றப்படவுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

மாநிலத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 15 லட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டப்பேரவைக்கு உட்பட்ட பகுதிகளில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய அவர், நிறைவடைந்த திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார்.

பின்னர் பேசிய அவர், மேலும், 45 ஆயிரம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படவுள்ளதாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம், எல்லப்பட்டியில் 17 ஏக்கர் பரப்பளவில் முருங்கை ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படவுள்ளதாக திரு. சக்கரபாணி குறிப்பிட்டார்.

>>>><<<<

தமிழகத்தில் மீன்வளத்தை பெருக்குவதற்காக சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், மயிலாடுதுறை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் 49 மீனவ கிராமங்களில் செயற்கை பவளப்பாறைகள் அமைக்கப்படவுள்ளதாக மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஐந்து மீனவர் கிராமங்களில் செயற்கை பவளப்பாறைகள் அமைக்கும் பணியை தருவைக்குளம் கிராமத்திலிருந்து அவர் தொடங்கி வைத்த பின் அவர் இதனை தெரிவித்தார்.

செயற்கை பவளப்பாறைகள் மூலம் மீன் உற்பத்தி பெருகி, மீனவர்களின் வாழ்வாதாரம் பெருகும் என்று திரு. அனிதா ராதாகிருஷ்ணன் கூறினார்.

>>>><<<<

தமிழகத்தில் 4 ஆயிரத்து 200 புதிய பேருந்துகளை வாங்குவதற்கு மாநில அரசு முடிவு செய்துள்ளதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் கூறியுள்ளார்.

பெரம்பலூர் மாவட்டம், குன்னத்தில் அரசு போக்குவரத்துக் கழக பணிமனையினை அவர் திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேலும் 3 ஆயிரம் பேருந்துகளை வாங்க கடந்த வாரம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

>>>><<<<

அரசு - தனியார் பங்களிப்பின் கீழ், அடையாறு ஆற்றின் சீரமைப்பு திட்டத்திற்காக 4 ஆயிரத்து 778 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அனுமதி வழங்கியுள்ளார்.

இதேபோல், கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டிடத்திற்கு கூடுதல் வசதிகளை ஏற்படுத்தித்தர 14 கோடியே 59 லட்சம் ரூபாய்

நிதிஒதுக்கீடு செய்து அவர் உத்தரவிட்டுள்ளதாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**>>>><<<<**

நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் முதல்முறை வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு இயக்கத்திற்கு ஆதரவு பெருகியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பான காணொலியையும் வெளியிட்டுள்ளார்.

இளையதலைமுறையினரிடையே வாக்களிப்பதற்கான ஆர்வமும் இதில் வெளிப்படுவதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, உலகப்புகழ் பெற்ற மாமல்லபுரம் கடற்கரை கோவில் வளாகத்தில் 100 சதவீத வாக்குப்பதிவின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில், ஏராளமான முதல்முறை வாக்காளர்கள் பங்கேற்றனர்.

வாக்களிப்பதை ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - வாக்காளர்கள் 48 செகண்ட்ஸ்)

**>>>><<<<**

பாரத ஸ்டேட் வங்கி அளித்திருந்த தேர்தல் பத்திர விவரங்களை தேர்தல் ஆணையம் தனது இணையதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது.

**www.eci.gov.in** என்ற இணையதளம் வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

**>>>><<<<**

தேர்தல் ஆணையர்களாக திரு. **Gyanesh Kumar**-ம், டாக்டர் **Sukhbir Singh Sandhu** -வும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

>>>><<<<

தமிழகத்தில் மகளிருக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருவதாக பிஜேபி மகளிர் அணித் தலைவர் திருமதி. வானதி சீனிவாசன் குற்றம் சாட்டியுள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போதைப்பொருள் புழக்கம் அதிகரித்ததே இதற்கு காரணம் என்று குறை கூறினார்.

தமிழகத்திற்கு தேவையான நிதியுதவியை மத்திய அரசு வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மொழியை, தமிழ் கலாச்சாரத்தை, தமிழரின் பெருமையை உலகம் முழுவதும் எடுத்துச் செல்லக்கூடிய தலைவராக பிரதமர் திரு. நரேந்திர மோடி திகழ்கிறார் என்றும் அவர் கூறினார்.

பிஜேபிக்கு எதிராக எத்தனை வழக்குகள் போட்டாலும், அதனை எதிர்கொள்ள தயாராக உள்ளதாகவும் திருமதி. வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

>>>><<<<

இருவரிச் செய்திகள்

ரஷ்யாவில் புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப்பதிவு இன்று தொடங்குகிறது.

>>>><<<<

பாலஸ்தீனத்தின் புதிய பிரதமராக திரு. **Mohamed Mustafa** நியமிக்கப்பட்டுள்ளார்.

>>>><<<<

மத்திய அரசு – ஆசிய வளர்ச்சி வங்கி இடையே 23 மில்லியன் டாலர் அளவிலான கடன் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

>>>><<<<

மணிப்பூரில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுகள் இன்று தொடங்குகின்றன.

>>>><<<<

ஈரோடு மாவட்டத்தில் சமூகநலத்துறை சார்பில் மாற்றுத் திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. முத்துச்சாமி வழங்கினார்.

>>>><<<<

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் அனைத்து செயல்பாடுகளும் 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கணினிமயமாக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

>>>><<<<

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் அங்காளம்மன் தேர் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

>>>><<<<

ஆல் இங்கிலாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 24—22, 11—21, 21—14 என்ற செட்கணக்கில் டென்மார்க்கின் **Anders Antonsen**—ஐ வென்றார்.

மகளிர் பிரிவில் பி.வி. சிந்து தோல்வியடைந்தார்.

>>>><<<<

**Orleans** மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிருஷ்ணபிரசாத் - சாய் ப்ரதீக் இணை காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-14, 21-9 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் **Cattoen - Renoir** இணையை வென்றது.

>>>><<<<

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் எலிமினேட்டர் சுற்றில் மும்பை அணி இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.